# வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் கிராவிடாஸ் 2022 அறிவுசார் தொழில்நுட்பத்திருவிழா



**வேலூர்,அக்.01**

விஐடி பல்கலைக்கழகத்தில் திராவிடாஸ் 2022 அறிவுசார் தொழில்நுட்ப திருவிழா அண்ணாரங்கத்தில் நேற்று தொடக்க விழா நடைபெற்றது.விழாவிற்கு வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை தாங்கினார்.சிறப்பு விருந்தினராக ராணுவ மந்திரியின் அறிவு ஆலோசகர் ஜி .சதீஷ்ரெட்டி கலந்து கொண்டு மாணவர்கள் அமைத்திருந்த சிறிய ரக விமானம், ட்ரோன் உள்ளிட்ட பல்வேறு கண்டுபிடிப்புகளை பார்வையிட்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது;

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதன் மூலம் மாணவர்கள் புதிய, புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உத்வேகம் பிறக்கும்.இது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாம் காலையில் எழுந்தது முதல் உபயோகிக்கும் அனைத்து பொருட்களும் என்ஜினீயர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. என்ஜினியரிங் பங்கு இங்கு முக்கியமானது.

15 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் 5 அல்லது 6 என்ஜினியரிங் கல்லூரிகள் மட்டுமே இருந்தன. சில ஆயிரம் என்ஜினியர்கள் மட்டுமே உருவாகினர்.ஆனால் தற்போது ஒரு ஆண்டுக்கு 14 லட்சம் என்ஜினியர்கள் வெளியே வருகிறார்கள். அனைவருக்கும் வேலை வாய்ப்பு உருவாக்க அரசு பங்களிப்பு அளித்து வருகிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பு என்ஜினியரிங் படித்த மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று வேலை செய்வார்கள். அங்கேயே நிரந்தரமாக தங்கி விடுவார்கள்.இந்தியாவிலேயே பணி புரிகின்றனர்

ஆனால் தற்போது என்ஜீனியரிங் படித்த 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தியாவிலேயே பணி புரிகிறாகள். இங்கு இருந்து வெளிநாடுகளுக்கு சென்றாலும் சில ஆண்டுகளிலேயே திரும்பி வந்து தாய்நாட்டில் பணி புரிகின்றனர்.கடந்த 2016-ம் ஆண்டு 421 சுய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. இந்த ஆண்டு வரை 75 ஆயிரம் சுய தொழில் நிறுவனங்கள் உருவாகியுள்ளது.நாட்டின் தேவைக்காக அனைத்தையும் இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். 20 ஆண்டுகளுக்கு முன்பு தொழில்நுட்பம் வளரவில்லை .ஆனால் இப்போது தொழில்நுட்பம் மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது. மேக் இன் இந்தியா பற்றி பிரதமர் நரேந்திர மோடி பேசியுள்ளார். இந்தியாவிலேயே புதிய, புதிய தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நமக்கு தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்கிறோம். உலகிலேயே நீளமான துப்பாக்கி இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது. இது இந்த ஆண்டு இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை பிரதமர் பாராட்டியுள்ளார்.விண்வெளி ஆராய்ச்சிக்கு தேவையான எந்திரங்கள் உள்ளிட்டவற்றை நாமே தயாரிக்கிறோம் .இணையவழி குற்றங்களை கண்டுபிடிக்கவும் தேவையான உபகரணங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.இதில் இளம் என்ஜினியர்கள் பங்கு அதிகமாக உள்ளது.புதுமையான கண்டுபிடிப்புகளை மாணவர்கள் தொழில்நுட்பத்தில் புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும். தொழில்துறை உற்பத்தி தற்போது 17 சதவீதமாக உள்ளது. இதனை 25 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் இளம் என்ஜினியர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும். தொழில்துறையில் உற்பத்தி அதிகமானால் வேலைவாய்ப்பும், பொருளாதாரமும் பெருகும்.உலகில் முதல் முறையான கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும். ராணுவ தொழில்நுட்ப நிதி ரூ. 10 கோடியாக இருந்தது. தற்போது ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது போன்ற வாய்ப்புகளை மாணவர்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.விழாவில் கவுரவ விருந்தினர்களாக பெங்களூரு ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் ஆசிய கல்வித் துறை தலைவர் தீபங்கர் பட்டாச்சாரியா , ஸ்னைடர் எலக்ட்ரிக் இந்தியா நிறுவன துணைத்தலைவர் சித்ரா சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். தொடர்ந்து வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் பேசுகையில், கிராவிடாஸ் 2022ல் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வி.ஐ.டி மாணவர்களும், 5 ஆயிரம் வெளிமாநில, வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டுள்ளனர். இந்த அறிவுசார் தொழில்நுட்ப திருவிழா தொடர்ந்து 3 நாட்கள் நடக்கிறது. இதில் 150 க்கும் மேற்பட்ட போட்டிகள் நடக்கிறது. கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் நாம் குறைந்த அளவே பணம் செலவழிக்கிறோம். இதனை மத்திய, மாநில அரசுகள் அதிகப்படுத்த வேண்டும். கல்வியில் சிறந்து விளங்கும் நாடு பொருளாதாரத்திலும் முன்னேறும். நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக நாம் பாடுபடுகிறோம். ஆனால் இது போதாது. இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார்.விழாவில் வி.ஐ.டி பல்கலைக்கழக துணை தலைவர் சங்கர் விஸ்வநாதன், உதவி துணைத்தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன், துணைவேந்தர் ராம் பாபுகோடாலி, இணை துணை வேந்தர் நாராயணன், பதிவாளர் ஜெயபாரதி கலந்து கொண்டனர். முடிவில் மாணவ ஒருங்கிணைப்பாளர் திவ்யதர்ஷினி நன்றி கூறினார்.

# 10.5 சதவிதம் வன்னியர்களுக்கான இடஒதுக்கீட்டை சட்டமாக்க வேண்டும்

## பாமக மாநில தலைவர் அன்புமணி ராமதாஸ் பேட்டி



**திருவண்ணாமலை அக். 1-**

தமிழகத்தில் 10.5 சதவிதம் வன்னியர்களுக்கான இடஒதுக்கீட்டை சட்டமாக்க வேண்டுமென்று திருவண்ணாமலையில் பாமக மாநில தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறினார். திருவண்ணாமலை தெற்கு மேற்கு மாவட்ட பாமக நிர்வாகிகள் கூட்டம் திருவண்ணாமலை கிரிவல பாதையிலுள்ள வேடியப்பனூரில் தெற்கு மாவட்ட செயலாளர் ஏந்தல் பெ.பக்தவச்சலம் தலைமையில் நேற்று நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் இரா.காளிதாஸ், இரா. ஜானகிராமன், அ.வே.பிரசாத் த.கோபி ஆகியோர் முன்னிலை வகிக்க மேற்கு மாவட்ட செயலாளர் இல.பாண்டியன் அனைவரையும் வரவேற்றார். இதில் கட்சியின் மாநில தலைவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். முன்னதாக அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் நந்தன் கால்வாய் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். தென்பெண்ணை ஆற்றிலிருந்து நந்தன் கால்வாய்க்கு தண்ணீர்கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். திருவண்ணாமலை பகுதியில் சிப்காட் தேவை ஆனால் விவசாய நிலத்தை அழித்து மற்றொரு திட்டத்தை கொண்டுவருவதை ஏற்க முடியாது அரசு நிலம் மற்றும் தரிசு நிலங்களில் சிப்காட் (தொழிற்பேட்டை) கொண்டுவரவேண்டும் 8 வழிச்சாலை திட்டம் தேவையற்றது ஆம்னி பேருந்து கட்டணத்தை குறைக்க வேண்டும் இதேபோல மின்கட்டணத்தையும் குறைக்க வேண்டும். தமிழகத்தில் 10.5 சதவிதம் வன்னியர்களுக்கான இடஒதுக்கீட்டை சட்டமாக்க வேண்டும் தற்போது சட்டம் ஒழுங்கு பாதுகாக்க ஆர்எஸ் எஸ் மற்றும் விடுதலை சிறுத்தைகள் மற்றும் மற்ற அமைப்புகளுக்கு ஊர்வலம் நடத்த காவல்துறை மூலம் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. திமுக அதிமுகவுக்கு மாற்றாக பாமக உள்ளது. 2026ம் ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலில் பாமக ஆட்சியை பிடிக்க கட்சியினர் ஒருங்கிணைந்து களப்பணியாற்றிட வேண்டும் என்றார். பேட்டியின்போது மாநில தேர்தல் பணிக்குழு தலைவர் மீ.கா. செல்வகுமார், மாவட்ட செயலாளர்கள் ஏந்தல் பெ.பக்தவச்சலம், இல.பாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.கணேஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# மாற்றுதிறனாளிகள் முன்னேற்றத்தில் ராணிபேட்டை மாவட்டம் முதலிடம்

## அரக்கோணத்தில் அமைச்சர் பெருமிதம்



**அரக்கோணம் அக்01**

ராணிபேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரத்தில் மாற்று திறனாளிகளுக்கு நலஉதவி திட்டங்கள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. கலெக்டர் பாஸ்கர பாண்டியன் விழாவிற்கு தலைமை தாங்கி பேசினார். மாவட்ட அலுவலர் சரவணகுமார் வரவேற்றார். அரக்கோணம் எம்பி ஜெகத்ரட்சகன் ஆற்காடு எம்;எல்ஏ ஈஸ்வரப்பன் முன்னிலை வகித்தனர். விழாவில் 160 பயனாளிகளிடம் ரூ22லட்சம் மதிப்புடைய நல திட்டங்களை வழங்கிய அமைச்சர் காந்தி பேசிய போது மாற்று திறனாளிகளான உங்களுக்காக நன்றாக உழைத்து திட்டங்களை தருவதில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது. அந்த வகையில் நம்முடைய மாவட்ட ஆட்சியரும் மாவட்ட துறை அலுவலரும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். அதன் பயனாக தமிழகத்தில் மாற்று திறனாhளிக்கு திட்ட நிறைவேற்றி கொடுத்ததில் நம்ராணிபேட்டை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது என பேசினார். கோட்டாச்சியர் பாத்திமா தாசில்தார் சுமதி நகர மன்ற தலைவர் பா.லட்சுமி ஒன்றிய தலைவர் ச.நிர்மலா ஆணையாளர் ஆர்.லதா பொறியாளர் ஏடி.ஆசீர்வாதம் திமுக நகர செயலாளர் விஎல்.ஜோதி ஒன்றிய செயலாளர் தமிழ்செல்வன் சவுந்தர் பசுபதி எஸ்ஜிசி.பெருமாள் கவுன்சிலர்கள் கேஎம்பி.பாபு செந்தில்குமார் ராஜன்குமார் உட்பட அரசு அலுவலர்கள் கட்சி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை மாவட்ட மக்கட் தொடர்பு அலுவலர் அசோக் தொகுத்து வழங்கினார்.

# நகராட்சி குப்பை கழிவு நீரால் காவனூர் பகுதி அதிகம் பாதிப்பு

## அமைச்சரிடம் பஞ்.தலைவர் புகார் மனு



**அரக்கோணம அக்01**

ராணிபேட்டை மாவட்டம் அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கிடங்கு காவனூர் ஊராட்சி எல்லைக்குள் இருக்கிறது இங்கு ரூ5.18 லட்சம் மதிப்பீட்டில் நகரபுற காடு அமைக்கும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைக்க அமைச்சர் காந்தி வந்திருந்தார். அப்போது காவனூ}; ஊராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி சந்திரன் அமைச்சரிடம் பொது மக்கள் நலன் குறித்த மனு ஒன்றை கொடுத்தார். அந்த மனுவில் கேட்டு கொண்டதாவது. காவனூர் ஊராட்சியின் எல்லை சில்வர்பேட்டை இங்கு உள்ள பகுதியான இங்;கு நகராட்சி குப்பைகள் அதிக அளவில் கொட்டபடுகிறது. இதனால் கொசுக்கள் ஈக்கள் தொல்லை அதிகரித்து சுகாதார சீர்கேட்டை உருவாக்கி வருகிறது. மேலும் இங்குள்ள சம்மந்தாங்கல் ஏரி முக்கிய குடிநீர் ஆதாரம் கொண்டது இந்த ஏரியிலும் நகரபுற கழிவுநீர் கலப்பதால் தண்ணீர் மாசு அடைந்து குடிநீரையும் விவசாயத்தையும் பாதித்து வருகிறது. எனவே இத்தொல்லைகளில் இருந்து கிராம மக்கள் பாதுகாக்க மாற்று இடத்திற்கு குப்பை கொட்ட உத்தரவு வழங்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன் என மனுவில் கேட்டு கொண்டார். அப்போது வக்கில் சந்திரன் உள்ளிட்ட வார்டு உறுப்பினர்கள் பலரும்; உடனிருந்தனர். முன்னதாக ஒன்றிய செயலாளர் ஆர்.தமிழ்செல்வன் பஞ்சாயத்து தலைவர் தனலட்சுமி சந்திரன் ஆகியோர் அமைச்சர் காந்தி மற்றும் எம்பி ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகளை வரவேற்றனர்.

# தி.மலையில் விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம்

## கலெக்டர் .பா.முருகேஷ் தலைமையில் நடந்தது



**திருவண்ணாமலை அக் 1-**

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாய குறை தீர்வு கூட்டம் கலெக்டர் .பா.முருகேஷ். தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் செயல்படுத்துதல், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வள துறையின் மூலம் ஏரி குளங்கள் மற்றும் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றவும், வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள காப்புக்காடுகளை மறுசீரமைப்பு செய்து முட்செடிகளை அகற்றி விட்டு நல்ல பலன்தரக்கூடிய மரக்கன்றுகளை நட்டு அடர்ந்த காடுகளாக உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் விவசாயிகளுக்கு தேவையான விவசாயிகளின் விளைநில மண்ணிற்கு நுண்ணுயிர் ஊட்டசத்து மண்வள பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு அவ்வப்போது மண் தரத்தை பற்றியும், நிலத்திற்கு உயிர் ஊட்டும் நுண்ணுயிர் சத்தை பற்றியும் வேளாண்;மைத்துறையின் மூலம் நடமாடும் மண்வள பரிசோதனை வாகனத்தின் மூலம் விவசாயிகளுக்கு வட்டங்கள் வாரியாக மண்வள பரிசோதனைக்கான விழிப்புணர்வு வழங்க வேண்டும். அதே போல் நமது மாவட்டத்தில் விளையக்கூடிய பிரதான பயிர்;களான நெல், கரும்பு ,மணிலா போன்றவைகளுக்கு கூடுதல் விளை உயர்த்தி வழங்க வேண்டும் எதிர் வரும் காலங்கள் வடகிழக்கு பருவ மழைக்காலம் என்பதால் ஏரிகள், பக்கக்கால்வாய்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் தூர்வாரும் பணிகளை விரைவு படுத்த வேண்டும் பால்மரோசா பயிரிடப்படும் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையின் மூலம் குழு க்கள் அமைத்து அவர்களுக்கு தேவையான வே ளாண் உபகரண கருவிகளை உடனே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டங்கள், உள்ளிட்ட மேலும் பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினார்கள். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை விவசாயிகள் வலியுறுத்திய அனைத்து கோரிக்கைகளையும் தகுதியின் அடிப்படையில் தீர்வு காண வேண்டும் என கலெக்டர் .பா.முருகேஷ். துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.இக் கூட் டத் தில் இணை இயக்குநர் வேளாண் மைத் து றை. அ.பாலா, மண்டல இணை இயக்குநர் கால் நடை பராமரிப்புதுறை மரு.சோமசுந்தரம், திருவண்ணாமலை கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் நடராசன், வேளாண்மை துணை இயக்குநர் மா.மாரியப்பன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் .

வே.சத்தியமூர்த்தி,வேளாண்மை கிருஷ்ணமூர்த்தி நிலம், அரசு அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்களிடையே போட்டிகள்

## கலெக்டர் பாராட்டு சான்று மற்றும் புத்தகங்களை வழங்கினார்



**திருவண்ணாமலை அக்1-**

திருவண்ணாமலை செப்டம்பர் 27 உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு பள்ளி மாண வர் க ளி டையே 23.09.2022 அன்று நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு நேற்று கலெக்டர் முகாம் அலுவலகத்தில் கலெக்டர் .பா.முருகேஷ். பாராட்டு சான்று மற்றும் புத்தகங்களை வழங்கினார்.

உலக சுற்றுலா தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 27 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த தினத்தை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் சுற்றுலாத்துறை; கல்வித்துறையுடன் இணைந்து பள்ளி மாணவர்களிடையே கட்டுரை எழுதுதல், ஓவியம் வரைதல், நடனம் மற்றும் பேச்சுப் போட்டிகள் 23.09.2022 அன்று நடத்தப்பட்டது. உலக சுற்றுலா தின கருப்பொருளில் சுற்றுலா மறுசிந்தனை என்ற தலைப்பில் ஒரு வலைதளம் 27.09.2022 அன்று சுற்றுலா பங்குதாரர்கள் மற்றும் கல்வித்துறை மத்தியில் நடத்தப்பட்டது.

கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற வேட்டவலம் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி;யை சேர்ந்த கோகுல்நாத், தண்டராம்பட்டு அரசு மகளிர்; மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த கோபிகா, திருவண்ணாமலை நகராட்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த ரூபினி, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற தண்டராம்பட்டு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த சென்னம்மாள், வேட்டவலம் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி;யை சேர்ந்த விஷால், ஆவூர் அரசு உயர்நிலைப்பள்ளியை சேர்ந்த மெஹராஜ், ஓவியப போட்டியில் வெற்றி பெற்ற செங்கம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த ருக்சார், திருவண்ணாமலை நகராட்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த காவியா, ஆவூர் அரசு உயர் நி லைப் பள் ளியை சேர்ந்த ரம்யா, நடனப் போட்டியில் வெற்றி பெற்ற தண்டராம்பட்டு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த அனுஷ்கா, திருவண்ணாமலை நகராட்சி அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த பிரதிபா பிரகாசம், தனலட்சுமி, சியானா மற்றும் ஆவணியாபுரம் அரசு உயர் நி லைப் பள் ளியை சேர்ந்த தாமரை ஆகியோர்களுக்கு கலெக்டர் .பா.முருகேஷ். பாராட்டு சான்றிதழ் மற்றும் புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி சுற்றுலா அலுவலர் பெ.அஸ்வினி, முதுநிலை தமிழாசிரியர் வேலாயுதம் மற்றும் பலர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# செங்கம் முன்னாள் திமுக ஒன்றிய செயலாளர் பிரபாகரன் பொதுக்குழு உறுப்பினராக நியமனம்

**செங்கம் அக்1**

செங்கம் முன்னாள் ஒன்றிய திமுக செயலாளர் பிரபாகரன் பொதுக்குழு உறுப்பினராக தேர்வாகி அறிவிக்கப்பட்டு உள்ளார்.திமுக நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலை தலைமை அறிவித்துள்ளது.

இதில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட நிர்வாகிகளில் பொதுக்குழு உறுப்பினராக குப்பனத்தம் பிரபாகரன் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கபட்டு உள்ளார்.பொதுக்குழு உறுப்பினராக அறிவிக்கப்பட்டு உள்ள பிரபாகரன் 11ஆண்டுகள் செங்கம் ஒன்றிய திமுக செயலாளராக இருந்தார்.செங்கம் ஒன்றியம் குப்பனத்தம் ஊராட்சி மன்ற தலைவராகவும் ஒன்றிய கவுன்சிலராகவும் இருந்தவர்.



இவர் மனைவி சுமதி பிரபாகரன் தற்போது ஒன்றியக்குழு துணை தலைவராக உள்ளார்.

பொதுக்குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டு உள்ள பிரபாகரனுக்கு திமுக கட்சியினர் வாழ்த்து தெரிவித்தனர்.

# கடலூர் சி.கே. பள்ளியில் நவராத்திரி கொண்டாட்டங்களையொட்டி கொலு பொம்மை காட்சி

**கடலூர் ,அக் 1.**

கடலூரில் நவராத்திரி கொண்டாட்டங்களை உயர்த்தும் வகையில் சிகே ஸ்கூல் ஆப் பிராக்டிகல் நாலெட்ஜ், ஒன்பது நாட்களாக பல்வேறு நவராத்திரி கொலு பொம்மை காட்சி வளாகத்தில் வைக்க ஏற்பாடு செய்துள்ளது. இந்த நவராத்திரி விழாக்களில் ஒரு பெரிய "கொலு" பொம்மை காட்சி மற்றும் அனைத்து தர வகுப்பு மாணவர்களின் பல்வேறு கலை இலக்கிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. ஒன்பது நாட்கள் நடைபெற போகும் இந்த பிரமாண்டமான "கொலு" பொம்மை காட்சியில், பொதுவான கருப்பொருளின் கீழ் தனித்துவமான மாதிரிகள் மற்றும் கருப்பொருள்கள் துர்க்கை அம்மன் முன்னிலையில் வைக்கப்படுகிறது. செப்டம்பர் 26,2022 திங்கட்கிழமையன்று தொடங்கப்பட்ட இந்த கொண்டாட்டம் அக்டோபர் 5ம் தேதி வரை நடைபெற உள்ளது.இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய சிகே குழும கல்வி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் திருமதி அமுதவல்லி ரங்கநாதன் கூறுகையில்.எங்கள் வளாகத்தில் அனைத்து தர வகுப்பு மாணவர்களும் இணைந்து நடத்தும் மாபெரும் நவராத்திரி விழா கொண்டாட்டத்தை நடத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதில் மாணவர்கள் ஒன்றிணைந்து தங்கள் ஆக்கப்பூர்வமான திறமைகளை வெளிக்கொணரவும், ஒரு குழுவாக செயல்பட்டு பணி யாற் று வ தற் கான வாய்ப்பு ஏற்படுகிறது. பல மாணவர்கள் தங்கள் திறமையை வெளி உலகிற்கு வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்,

இது மாணவர்களின் நம்பிக்கையைத் தூண்டும் வகையில் மட்டுமில்லாமல் அவர்களின் ஆர்வத்தைத் தொடரவும் ஊக்குவிக்கும். சிகே ஸ்கூல் ஆப் ப்ராக்டிகல் நாலெட்ஜில் ஒன்பது நாள் விழாக்களில் மாணவர்களால் நடத்தப்படும் கர்நாடகப் பாடல்கள் போன்ற கச்சேரி பாணி இசை நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர்களின் ஆர்கெஸ்ட்ரா நிகழ்ச்சிகள் மற்றும் தாண்டியா மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் என பல்வேறு கலை இலக்கிய போட்டிகள் இந்த கால கலாச்சாரத்திற்கு ஏற்றவாறு அதை பிரதிபலிக்கும் வகையில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது . சிலப்பதிகாரம், மகாபாரதம் மற்றும் ராமாயண கதாபாத்திரத்தின் மாதிரியான வேடங்கள் மற்றும் கடலூரின் சிறப்புக் காட்சி போன்ற தமிழின் உன்னதமான இலக்கியங்களின் பொழுதுபோக்கும் இந்த ஆண்டு "கொலு" காட்சியின் சில முக்கிய கருப்பொருள்கள் ஆகும். சிபிஎஸ்இ மற்றும் சிகே பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, கடலூர் ஆகியவற்றுடன் இணைந்து சிகே முன்னேற்றக் கல்விப் பள்ளியிலும் இதே போன்ற செயல்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter .I,P.AMBETHKAR. S/o. N.Perumal, Aged-25years, No.4, Ambethkar street, VembiVillage & Post, KalavaiT.K, Ranipet D,T..Pincode. 632518. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Building, High Court Campus, Chennai – 600104. Those who have any valid objections may notify the same to The Bar Council within 10 days.

P.AMBETHKAR

# சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் வகையில் வீடுகள் தோறும் ஆய்வு செய்ய வரும் மாநகராட்சி பணியாளர்கள்

## மக்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டுகோள்

**சென்னை,அக்.01**

சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் வகையில் கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 2,084 சிறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு 954 கொசு ஒழிப்பு நிரந்தரப் பணியாளர்கள், 2,317 ஒப்பந்தப் பணியாளர்கள் என மொத்தம் 3,271 பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 224 மருந்து தெளிப்பான்கள், 120 பவர் ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் 300 ஸ்ப்ரேயர்கள், 229 கையினால் இயங்கும் புகைப்பரப்பும் இயந்திரங்கள், 8 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் 67 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு கொசுக்களை கட்டுப்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் கொசுப்புழுக்களை அழிக்க ஒரு வார்டிற்கு கொசு மருந்து தெளிப்பான்களுடன் இரண்டு நபர்கள் என 200 வார்டுகளுக்கும் 400 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு குழுவிற்கு 2 நபர்கள் என நாளொன்றிற்கு ஒரு கி.மீ. தூரத்திற்கு கொசு மருந்து தெளிக்க வேண்டும். ஒரு இடத்தில் வாரத்திற்கு ஒரு முறை கண்டிப்பாக மருந்து தெளிக்கவேண்டும்.

மேலும், 247 கி.மீ. நீர்வழித்தடங்களில் கொசு மருந்து தெளிக்க 128 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு குழுவிற்கு 3 நபர்கள் என நீர்வழித்தடங்களில் நாளொன்றிற்கு ஒரு கி.மீ தூரத்திற்கு கொசு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குடிசைப் பகுதிகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் ஆகிய பகுதிகளில் புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு கொசுப் புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நாள்தோறும் காலை 6.00 மணி முதல் 7.30 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் 7.30 வரையிலும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகராட்சி பணியாளர்கள் மூலம் 10,97,632 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் 9,117 வீடுகளில் கொசுப் புழு வளரிடங்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திறந்த நிலையில் உள்ள கிணறுகள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் காலிமனைகள் ஆகிய இடங்களில் மாநகராட்சி களப் பணியாளர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கொசுப்புழு வளரிடங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது மழை அவ்வப்பொழுது பெய்து வருவதால், மழைநீர் தேங்கக்கூடிய இடங்களில் கொசுப்புழுக்கள் வளர வாய்ப்புள்ளது. எனவே, பொதுமக்கள் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் உபயோகமற்ற டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உடைந்த சிமெண்ட் தொட்டிகள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழு உருவாகும் வாய்ப்புள்ளதால், அதனை உடனடியாக அகற்ற வேண்டும்.

மேலும், கிணறு, மேல்நிலைத் தொட்டி, கீழ்நிலைத் தொட்டி, தண்ணீர் தொட்டிகள் முதலியவற்றை கொசுக்கள் மற்றும் கொசுப்புழு புகா வண்ணம் மூடி வைக்க வேண்டும். தண்ணீர் நிரப்பிய பூ ஜாடி மற்றும் கீழ்த்தட்டு, குளிர்பதன பெட்டியின் கீழ்த் தட்டு, மணிபிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றி தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்க வேண்டும்.

வீடுகளில் களஆய்வு மேற்கொள்ள மண்டல சுகாதார அலுவலரால் வழங்கப்பட்ட மாநகராட்சி அடையாள அட்டையுடன் வரும் மாநகராட்சி பணியாளர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.



திருவள்ளூர்மாவட்டகலெக்டர்அலுவலகவளாகத்தில்அமைச்சர்துரைமுருகன்தலைமையில் சென்னைமண்டலத்துக்குட்பட்ட13மாவட்டங்களில்உள்ளநீர்வளத்துறைஅலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் நீர்வளத்துறை அரசு கூடுதல்தலைமைசெயலர்சந்தீப்சக்சேனா,கலெக்டர்ஆல்பிஜான்வர்கீஸ்பங்கேற்றனர்.

# குட்கா விற்பனை செய்த கடைகளுக்கு சீல் உணவு பாதுகாப்புத்துறை அதிரடி நடவடிக்கை

**சென்னை அக் 1-**

குட்கா விற்பனை செய்த கடைகளுக்கு 'சீல்' வைத்து உணவு பாதுகாப்புத்துறை அதிரடி நடவடிக்கை எடுத்தது. சென்னை சென்னையில் குட்கா உள்ளிட்ட போதையூட்டும் வஸ்துகளை விற்பனை செய்யவோ, பதுக்கி வைக்கவோ தடை விதிக்கப்பட்டு உள்ளது.

சட்டவிரோதமாக இந்த சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கைகளும் பாய்ந்து வருகின்றன. சென்னை புரசைவாக்கத்தில் குட்கா விற்பனை நடப்பதாக உணவு பாதுகாப்புத்துறைக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து உணவு பாதுகாப்பு துறை ஆணையாளர் மற்றும் நியமன அதிகாரி உத்தரவின் பேரில் அதிகாரிகள் என்.ராஜா உள்ளடங்கிய குழுவினர் புரசைவாக்கத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது சுந்தரம் தெருவில் உள்ள ஒரு கடையில் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த குட்கா பாக்கெட்டுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இந்த கடைக்கு ஏற்கனவே 3 தடவை அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த கடைக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்து நடவடிக்கை மேற்கொண்டனர். இதேபோல சூளை நெடுஞ்சாலையிலும் சில கடைகளுக்கு 'சீல்' வைக்கப்பட்டது. இந்த அதிரடி சோதனையில் 5 கிலோ அளவிலான குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ''குட்கா போன்ற போதைப்பொருட்களை விற்பனை செய்வோரை ரகசியமாக கண்காணித்து வருகிறோம். எனவே திடீர் ஆய்வுகள் இனி அடிக்கடி மேற்கொள்ளப்படும்' என்றனர்.

# காச நோய் ஒழிப்பு குறித்த கருத்தரங்கம்



**செங்குன்றம்,அக்.1-**

செங்குன்றத்தை அடுத்த பாடியநல்லூர் சுங்கசாவடி அருகே உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவமனை சார்பாக அரசு மருத்துவர்களும் தனியார் மருத்துவமனை மருத்துவர்களும் இணைந்து காச நோய் ஒழிப்பு குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மாவட்ட காச நோய் பிரிவு இணை இயக்குனர் லட்சுமி முரளி, மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆனந்த் ,மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் முனியப்பன் ,இந்திய மருத்துவ சங்க தலைவர் டாக்டர் செல்வம், டாக்டர்கள் முத்துக்குமரவேல் பிருந்தா, விக்னேஷ், அபிநயா, சந்திரசேகர் ,அருண்குமார், உள்ளிட்டோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர் காச நோய் ஒழிப்பு குறித்த ஆலோசனைகளும் நடைமுறைகளும் விவாதிக்கப்பட்டன விழாவில் காசநோய் ஒழிப்பு பணியில் ஈடுபட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன



**பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட போந்தவாக்கம் ஊராட்சியில்ஊராட்சிமன்றதலைவர்சித்ராபாபுமரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலக ஊழியர்கள், ஊராட்சி செயலாளர், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.**

# குடும்ப தகராறில் 2-வது மனைவியை மின்சாரம் பாய்ச்சி கொன்ற கணவர் கைது

**சென்னை அக் 1-**

குடும்பத் தகராறில் 2-வது மனைவியின் உடலில் மின்சாரம் பாய்ச்சி கொன்ற கணவரை போலீசார் கைது செய்தனர். சென்னை வண்ணாரப்பேட்டை கத்திவாக்கம் மெயின் ரோடு காத்பாடா பகுதியைச் சேர்ந்தவர் ஷாஜகான் (வயது 48).

இவர், தனியார் தோல் கடையில் தையல்காரராக வேலை செய்து வருகிறார். இவருடைய முதல் மனைவி இறந்து விட்டார். அதன்பிறகு 2016-ம் ஆண்டு பழைய வண்ணாரப்பேட்டை நைனியப்பன் கார்டனைச் சேர்ந்த ஹசினாபேகம்(37) என்பவரை 2-வது திருமணம் செய்து கொண்டார். கடந்த 27-ந்தேதி இரவு கணவன்-மனைவி இருவரும் வீட்டில் படுத்து தூங்கினர். மறுநாள் காலை ஹசினா பேகம் படுக்கை அறையில் அசைவற்று கிடந்தார். அவரை எழுப்பியும் எழுந்திருக்கவில்லை. படுக்கையிலேயே அவர் இறந்து கிடப்பதாக ஹசினா பேகத்தின் பெற்றோருக்கு ஷாஜகான் தகவல் தெரிவித்தார்.

அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த ஹசினாபேகத்தின் தாயார் ஷாபிராபேகம், தனது மகள் சாவில் சந்தேகம் இருப்பதாக வண்ணாரப்பேட்டை போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார், ஹசினாபேகம் உடலை பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர்கள், ஹசினாபேகம் உடலில் மின்சாரம் பாய்ந்து இருப்பதாகவும், கை மற்றும் கழுத்தில் அதற்கான காயம் இருப்பதாகவும், உடலில் மின்சாரம் பாய்ந்ததாலேயே அவர் இறந்து இருப்பதாகவும் தெரிவித்தனர். இதையடுத்து வண்ணாரப் பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் தவமணி மற்றும் போலீசார் ஷாஜகானை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரித்தனர். அதில், சம்பவத்தன்று இரவு கணவன்-மனைவி இடையே ஏற்பட்ட தகராறில் ஆத்திரம் அடைந்த ஷாஜகான், மனைவி ஹசினா பேகம் தூங்கியபிறகு முகத்தில் தலையணையை வைத்து அமுக்கினார். இதில் அவர் மயங்கியதும், அவரது உடலில் மின்சாரத்தை பாய்ச்சி கொலை செய்ததும், பின்னர் படுக்கையிலேயே அவர் இறந்து கிடப்பதாக கூறி நாடகமாடியதும் தெரிந்தது. இது பற்றி வழக்குப்பதிவு செய்த போலீசார், ஷாஜகானை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.



**சென்னங்காரணி ஊராட்சி பெருமாள் கோயில் தெரு காலனி பகுதியில் இல்லம் தேடி கல்வி திட்டத்தின் கீழ் மாணவ மாணவியருக்குஆசிரியைகோமளாபாடம்நடத்திவருகிறார்.**



**விருகம்பாக்கம் தொகுதிக்கு உட்பட்ட 136வது வார்டில் வடகிழக்குபருவமழையின்முன்னச்சரிக்கைநடவடிக்கைகள் குறித்து மாமன்ற உறுப்பினர் து.நிலவரசி மாநகராட்சி அனைத்துதுறைஅதிகாரிகளுடன்ஆலோசனைநடத்தினார். உடன் திமுக பொது குழு உறுப்பினர் உ.துரைராஜ் வட்ட செயலாளர் பூக்கடை ஆர்.பழனிசாமி உள்ளனர்.**

# திருவள்ளூர் மாவட்டம்,காட்டூரில் மத்திய உவர் நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் சார்பில் புதிய நண்டு மற்றும் கோழிப்பண்ணைகள் திறப்பு



**பொன்னேரி அக்-1**

திருவள்ளூர் மாவட்டம், காட்டூரில் மத்திய உவர் நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் சிபா /எஸ்.டி.சி பழங்குடி மக்கள் நலத்திட்டத்தின் கீழ் கடலோர பழங்குடி மக்களுக்கு உவர் நீர் மீன் தொழில்நுட்பங்களோடு வேளாண் சார்ந்த தொழில் நுட்பங்கள் கொடுத்து மாற்று வாழ்வாதாரம் ஏற்படுத்தும் விதத்தில் புதிய பண்ணைகள் அமைக்கப்பட்டு அதில் இறால் மீன் விடும் நிகழ்ச்சியும்,புதிய கோழிப்பண்ணைகள் அமைக்கப்பட்டு கோழிகள் விடும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. சிபா திட்டத்தில் காட்டூர் இருளர் பழங்குடி மகளிர்களை தேர்ந்தெடுத்து ஒரு குழுவாக இணைத்து இக்குழுவிற்கு சிந்தாமணி ஈஸ்வரர் மகளிர் குழு என்று பெயர் சூட்டி இவர்களை பங்காளர்களாக தேர்ந்தெடுத்துள்ளனர்.இருளர் பழங்குடியினர் பாரம்பரியமாக இறால்,நண்டு ஆகியவற்றை பிடிக்கும் மற்றும் வளர்க்கும் தொழில் ஈடுபட்டுள்ளனர். இது அவர்களுக்கு பழக்கமான தொழிலும் என்பதால் இந்த தொழில்நுட்பங்களை கையாளும்போது இவர்களுக்கு தொழில் வாய்ப்பு,சுய வருமானம்,வங்கியில் சேமிப்பு, குடும்பம் மற்றும் சமுதாய முன்னேற்றங்கள் மற்றும் வாழ்வாதார வழிகளும் கிடைக்கின்றன.இதன் பொருட்டு இருளர் பழங்குடி பெண்கள் பண்ணை அமைத்து சிறு தொழில் செய்து வருகின்றனர்.இதன் வளர்ப்பு காலம் முடிந்து இதற்கான அறுவடை நடைபெற்ற விற்பனையும் நடைபெற்றது. இதன் மூலம் இக்குழுவினருக்கு 90 லட்சம் மதிப்பிலான வருவாய் ஈட்டப்பட்டது. இதற்கான விழாவில் சிபா திட்டத்தின் தலைவியும் மூத்த விஞ்ஞானியுமான டாக்டர்.சாந்தி தலைமை வகித்தார்.இத்திட்டத்தின் மூத்த விஞ்ஞானிகள் டாக்டர் சி.வி. சாய்ராம்,டாக்டர் டி.செந்தில் முருகன்,டாக்டர் பி.மகாலட்சுமி ஆகியோர் விற்கப்பட்ட தொகை காண காசோலைகளை வழங்கினர். இதே போன்று பழவேற்காடு ஊராட்சி குளத்து மேட்டில் புதிய மாடி தோட்டமும் நண்டு அறுவடையும் நடைபெற்றது. கோட்டைக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட தோணிரேவு கிராமத்தில் நண்டு விற்பனைக்கான தொகை வழங்கும் நிகழ்ச்சியும் மாடித்தோட்டமும்,கோழி வளர்ப்பு பண்ணையும் துவக்கப்பட்டது.

# சென்னை விமான நிலைய புதிய முனையத்தில் பயணிகள் பாதுகாப்பு சோதனைக்காக 140 கவுண்டர்கள் அமைப்பு

**சென்னை அக் 1-**

சென்னை விமான நிலைய புதிய முனையத்தில் பயணிகள் பாதுகாப்பு சோதனைக்காக 140 கவுண்ட்டர்கள் அமைக்கப்பட்டு உள்ளது. அதற்கு காவி நிற வர்ணம் பூசப்பட்டு உள்ளதற்கு சிலர் சமூக வலைதளங்களில் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பயணிகள் மற்றும் விமான சேவைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் அதற்கு ஏற்ற வகையில் விமான நிலையத்தை விரிவுப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அதன்படி ரூ.2,400 கோடியில் 2.36 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் ஒருங்கிணைந்த புதிய முனையங்கள் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

பணிகள் முடிந்து இந்த ஆண்டு டிசம்பர் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் புதிய அதிநவீன ஒருங்கிணைந்த விமான முனையம் பயன்பாட்டுக்கு வரும் என கூறப்படுகிறது. சென்னை விமான நிலையத்தின் தற்போதைய முனையத்தில் பயணிகளுக்கான பாதுகாப்பு சோதனைகள், செக்-இன் கவுண்ட்டர்கள் 64 மட்டுமே உள்ளன. புதிய முனையத்தில் 140 செக்-இன் கவுண்ட்டர்கள் அமைக்கப்படுகின்றன. இதில் 100 கவுண்ட்டர்கள் முதல் கட்டமாகவும், 40 கவுண்ட்டர்கள் 2-ம் கட்டமாகவும் செயல்பாட்டுக்கு வரவிருக்கிறது. இந்தநிலையில் புதிய கவுண்ட்டர்களுக்கு வர்ணம் பூசும் பணிகள் நடக்கிறது. அனைத்து கவுண்ட்டர்களுக்கும் காவி நிற வர்ணம் பூசப்படுகிறது. இதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து சமூக வலைதளத்தில் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர். ஆனால் பயணிகளை கவரும் வகையில் புதிய வர்ணம் பூசப்படுகிறது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சாட்சி சொல்ல வந்தவரை கோர்ட்டு வளாகத்தில் மிரட்டிய 2 பேர் கைது

**சென்னை அக் 1-**

பெண் கொலை வழக்கில் சாட்சி சொல்ல வந்தவரை கோர்ட்டு வளாகத்தில் மிரட்டிய 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

சென்னை கோயம்பேடு, வடக்கு மாட வீதியைச்சேர்ந்தவர் குருநாத பாண்டியன் (வயது 57). பெண் கொலை செய்யப்பட்ட வழக்கு ஒன்றில், இவர் கடந்த 28-ந் தேதி பெரியமேடு அல்லிகுளம் வளாகத்தில் உள்ள மகிளா கோர்ட்டில் சாட்சியம் அளித்தார். சாட்சி சொல்லிவிட்டு வெளியில் வந்த அவரிடம், கோர்ட்டு வளாகத்தில் வைத்து 2 பேர், ''இனிமேல் சாட்சி சொல்ல வந்தால், உன்னை தீர்த்துக்கட்டி விடுவோம்'' என்று மிரட்டியதாக தெரிகிறது. இதுகுறித்து குருநாதபாண்டியன், பெரியமேடு போலீசில் புகார் அளித்தார். துணை கமிஷனர் கோபிநாத் உத்தரவின்பேரில், உதவி கமிஷனர் அரிக்குமார் மேற்பார்வையில், பெரியமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். இது தொடர்பாக கொடுங்கையூரைச் சேர்ந்த சுரேஷ் (34), மோகன் (33) ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

# வெங்கல் அரசு மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி



**ஊத்துக்கோட்டை, அக்-01.**

வெங்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வெங்கல் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 88 பேருக்கும், மாணவிகள் 102 பேருக்கும் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆவடி கல்வி மாவட்ட அலுவலர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் தங்கம் முரளி முன்னிலை வகித்தார். மாவட்ட பொறுப்புக் குழு வி.ஜே.சீனிவாசன், ஒன்றிய துணைச் செயலாளர் வி.நாகலிங்கம், மாவட்ட பிரதிநிதி ஜி.பாஸ்கரன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ராமன் ஆகியோர் வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அனைவரையும் பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்டெல்லா கிறிஸ்டிபாய் வரவேற்றார். உதவி தலைமை ஆசிரியர் ஆர்.பரமானந்தம் நன்றி கூறினார்.

கண், ரத்த தானம் செய்வீர்

# டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த வீடுதோறும் மாநகராட்சி பணியாளர்கள் ஆய்வு

**சென்னை அக் 1-**

மாநகராட்சி அடையாள அட்டையுடன் வரும் மாநகராட்சி பணியாளர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. பருவநிலை மாற்றம் காரணமாக டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்து வருகிறது.

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த மாநகராட்சி சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் 10 லட்சத்து 97 ஆயிரத்து 632 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வில் 9 ஆயிரத்து 117 வீடுகளில் கொசுக்கள் உருவாகும் இடங்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது மழை அடிக்கடி பெய்து வருவதால், வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் கிடக்கும் உபயோகமற்ற டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உடைந்த சிமெண்ட் தொட்டிகள் போன்றவைகளில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உருவாகும் வாய்ப்புள்ளது.

எனவே பொதுமக்கள் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும். கிணறு, தண்ணீர் தொட்டிகளை மூடி வைக்க வேண்டும். தண்ணீர் நிரப்பிய பூ 'ஜாடி', குளிர்சாதனப் பெட்டியின் கீழ்த்தட்டு, 'மணிபிளான்ட்' போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரத்துக்கு ஒருமுறை சுத்தப்படுத்த வேண்டும். வீடுகளில் களஆய்வு மேற்கொள்ள, மண்டல சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட மாநகராட்சி அடையாள அட்டையுடன் வரும் மாநகராட்சி பணியாளர்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொலை வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை

**சென்னை அக் 1-**

கொலை வழக்கில் வாலிபருக்கு ஆயுள் தண்டனை வழங்கி பூந்தமல்லி கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் பாண்டியன் (வயது 24). இவர், 2015-ம் ஆண்டு போரூரில் மவுண்ட்-பூந்தமல்லி சாலையில் உள்ள மதுக்கடையில் மதுபானம் வாங்க சென்றார். அப்போது அங்கு தனது நண்பருடன் நின்று கொண்டிருந்த உதயகுமார் என்ற கத்தி உதயகுமார் (33) என்பவர் பாண்டியனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதில் ஆத்திரமடைந்த உதயகுமார் அருகில் இருந்த கட்டையால் தாக்கியதில் பாண்டியன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து வளசரவாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து உதயகுமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் 2-ல் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி முருகேசன் நேற்று தீர்ப்பு வழங்கினார். இதில் உதயகுமார் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு ஆயுள் தண்டனையும், ரூ.1,000 அபராதமும் விதித்து உத்தரவிட்டார். அபராதம் கட்டத்தவறினால் மேலும் 6 மாதம் சிறை தண்டனை அனுபவிக்கவும் நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

# சென்னை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை அக் 1-**

சென்னை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்ட மர்ம நபர் ஒருவர், பல்வேறு இடங்களில் வெடிகுண்டு வெடிக்க இருப்பதாக மிரட்டல் விடுத்தார். மர்மநபர் பேசிய செல்போன் எண்ணைக் கொண்டு, அவரைக் கண்டறியும் பணியில் போலீசார் ஈடுபட்டனர். இந்நிலையில் மீஞ்சூர் அருகே. செல்போன் சிக்னல் காட்டியதைத் தொடர்ந்து, அங்கு சென்ற போலீசார், ரெயில் நிலையத்தில் இருந்த நபரை கைது செய்தனர். இதுதொடர்பாக அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அனுப்பம்பட்டு பகுதியை சேர்ந்த பட்டதாரி இளைஞரான லோகேஷ் என்கிற விக்னேஷ் என தெரியவந்தது. பின்னர் 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

